1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதற்கு நிதி கூட கொள்கையளவில் ஒதுக்கப்பட்டாலும், இன்னும் இடம் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை. நிலம் ஒப்படைக்கப்படுமானல் தொடர்ந்து அதற்கான கட்டிடப் பணிகள் நடைபெறும்.

கிருஷ்ணராயபுரம் சுகாதார நிலையக் கட்டடம்

*213 **வின. திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தின் ஒரு பகுதி 1975 இல் திடீரென இடிந்து விழுந்து விட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) வாடகைக் கட்டிடத்தின் ஒரு பகுதி 22–2–75 காலே இடிந்து விழுந்ததாக திருச்சி மாவட்ட சுகாதார அலுவலர் தெரிவித்துள்ளார். இந்த இடிபாட்டினுல் ஆரம்ப சுகாதார நிலைய மருந்துகள் வைத்திருந்த அறை சேதம் அடைந்தது என்றும் சில மரச் சாமான்கள் சேதம் அடைந்தன என்றும் கூறியுள்ளார். மேற்படி விபத்து இயற்கையானதே என்றும் வெடிவைப்போ அல்லது வேறு விதமான தீய நோக்கத்தோடோ செய்ததில்லை என்றும் காவல் துறையினர் 9—5—75 ஆம் தேதியிட்ட அறிக்கையில் கூறியுள்ளனர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த வாடகைக் கட்டிடம் உறுதியான கட்டிடம் தான். இயற்கையின் கோளாறினுல்தான் இடிந்து விழுந்தது என்று சொல்லப்படுவது பொருத்தமாக இல்லை. இப்படி இடிந்து விழுந்ததற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் இனிமேலாவது ஆராய முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நல்ல உறுதியான கட்டிடமாக இருந்த காரணத்தினுல்தான், மொத்தமாக இடிந்து விழாமல் ஓரிடத்தில் மட்டும் இடிந்து விழுந்திருக்கிறது. இதுபற்றி போலீசாரும் அறிக்கை கொடுத்திருக்கிருர்கள். இது இயற்கைக் கோளாறினுல் இடியவில்லை என்றுல், வேறு என்ன காரணம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்தால் எழுதி அனுப்ப வேண்டும்.